S.T.C No. 479/2025                    23.06.2026

PW 1 அபர்ணா க/பெ.கேசவன்

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் ஜெயராஜ்க்கு பணம் கொடுத்தாக சொல்லியுள்ளேன், அவரை எப்படி எனக்கு தெரியும் என்றால் ஜெயராஜ்ன் மனைவி நான் செவிலியராக பணியாற்றிய மேலூர் அரசு மருத்துவமனைக்கு அருகே உள்ள அமுதகலா என்ற தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தபோது என்னிடம் அவர் அரசு வேலை தருவதாக சொன்னதன் மூலம் அவர் எனக்கு பழக்கம். எத்தனை முறை ஜெயராஜ்ன் மனைவி மருத்துவமனைக்கு வந்துள்ளனர் என்றால் இருவரும் இரண்டு முறை வந்துள்ளனர். அதற்கு முன்னர் ஜெயராஜ், அவரது மனைவியை எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டு முறையும் எதிரியும், அவரது மனைவியும் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தார்களா அல்லது என்னை பார்ப்பதற்காக வந்தார்களா என்றால் சிகிச்சைக்காக வந்தார்கள். இரண்டு முறையும் வந்தபோது எதிரியும், அவரது மனைவியும் எவ்வளவு நேரம் என்னிடம் பேசினார்கள் என்றால் ஒரு மணிநேரம் பேசினார்கள். நான் பணியாற்றும் மருத்துவமனையில் வேலைக்கு இடையே ஒரு மணிநேரம் எதிரியிடம் பேச எனது மருத்துவமனையில் அனுமதி உள்ளதா என்றால் சிகிச்சைக்கு இடையே பேசினேன். நான் புகார் மனுவில் சொல்லியுள்ள பணத்தை யாரிடம் கொடுத்தேன் என்றால் எதிரியிடம் இரண்டு தவணையாக வங்கி மூலமாக கொடுத்தேன். நான் எந்த தேதியில், எவ்வளவு தொகை எதிரியிடம் கொடுத்தேன் என்றால் ஜீன் மாதம் 2021ம் வருடம் ரூ.70,000/- வங்கி மூலமாகவும், 2022ம் வருடம் ஜனவரி மாதம் ரூ.60,000/- கையில் ரொக்கமாகவும், 2022ம் வருடம் பிப்ரவரி மாதம் ரூ.50,000/- ரொக்கமாக கொடுத்தேன், 2023ம் வருடம் மே மாதம் ரூ.1,00,000/- ரொக்கமாக கொடுத்தேன்.

2) எதிரியிடம் ரொக்கமாக கொடுத்த பணத்தை யார் முன்னிலையில், எங்கு

வைத்து கொடுத்தேன் என்றால் எனது தாயார் கலைசெல்வி முன்னிலையில், பஸ் ஸ்டான்ட், எனது தாயார் வேலை செய்யும் கடை ஆகிய இடங்களில் கொடுத்துள்ளேன். நான் பல தவணைகளாக கடனுக்கு எதிரிக்கு கொடுத்துள்ளேன், வேலை வாங்குவதற்காக பணம் கொடுத்திருந்தால், ஒரே தவணையில் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல, எதிரி பல தவணைகளாக என்னிடம் பணம் கேட்டதனால் அவ்வாறு கொடுத்தேன். அவ்வாறு எதிரி பல தவணைகளாக கேட்டதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வீடியோ பதிவுகள் உள்ளது. ரூ.5,30,000/– என்னிடம் இருந்ததற்கு ஆதரவாக வங்கி கணக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பவித்ரா என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவரது எனது தம்பி மனைவி. பவித்ரா முன்னிலையில் எதிரிக்கு பணம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எதிரிக்கு பவித்ரா முன்னிலையில் பணம் கொடுத்தேனா, அல்லது பவித்ரா மூலமாக பணம் கொடுத்தேனா என்றால் பவித்ரா மூலமாகவும் சில தவணைகளில் பணம் கொடுத்துள்ளேன். எதிரியை நான் பணியாற்றும் மருத்துவமனையில் பார்த்த நிலையில் பவித்ரா மூலமாக நான் எதற்கு எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் பவித்ரா நம்பிக்கை கொடுத்தனால் அவர் மூலமாக எதிரிக்கு பணம் கொடுத்தேன். பவித்ரா இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன்.

3) ஜெயராஜ் மற்றும் அவரது மனைவி அரசாங்க பணியில் வேலை செய்கிறார்களா என்றால் இல்லை. அரசு வேலைக்கு தேர்வு எழுதிதான் செல்ல முடியும், அவ்வாறு தனி நபருக்கு பணம் கொடுத்து வேலை பெற இயலாது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், கொரனா கால கட்டத்தில் செவிலியராக பணியாற்றியதற்கான சான்றிதழ் வைத்து தற்காலிக பணியில் சேர்ந்து அதன்பின்னர் தேர்வு எழுதி வேலை பெறலாம் என்று எதிரி சொன்னார். அவ்வாறு எதிரி வேலை வாங்கி தருவதாக சொன்னதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு மற்றும் STC 480/25

ஆகிய இரண்டு வழக்குகளுக்கான காசோலை மொத்த தொகை ரூ.2,50,000/– என்றால் சரிதான். மீதமுள்ள ரூ.2,80,000/– எதிரியிடமிருந்து வேறு எந்த காசோலை மற்றும் புரோநோட் பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்து எதிரியிடமிருந்து ரூ.50000/– பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியிடமிருந்து ரூ.50,000/– பெற்ற விவத்தை புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

4) பவித்ராவிடம்தான் எதிரி இவ்வழக்கு காசோலை மற்றும் STC 480/25 வழக்கு காசோலைகளுக்கான பணமான ரூ.2,50,000/– பெற்று, எதிரியிடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவரிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியையும், அவரது மனைவியையும் எனக்கு நேரடியாக தெரியும் என்றும், பின்னர் பவித்ரா மூலமாக எதிரியை தெரியும் என்றும் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த மருத்துவமனையில் வேலை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது ).**